செ.வெ.எண்: 320 நாள்: 22.4.2020

# நிவாரணப்பொருட்கள் வழங்குவதற்கு தொண்டு நிறுவனங்கள் பாதுகாப்பு நடைமுறைகளை தவறாது பின்பற்றிட வேண்டும்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் நிவாரணப்பொருட்கள் வழங்குவதற்கு தொண்டு நிறுவனங்கள் பாதுகாப்பு நடைமுறைகளை தவறாது பின்பற்றிட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை பரவாமல் கட்டுப்படுத்திடவும் மற்றும் துாய்மைப்படுத்தும் பணிகளை போர்க்கால அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரடங்கு உத்திரவு அமலில் உள்ளதால், மாவட்டத்தில் உள்ள ஆதரவற்றோர், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், வெளிமாநில தொழிலாளர்கள், திருநங்கையர் மற்றும் வறியவர்களுக்கு அரசு மூலம் பல்வேறு வழிகளில் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் இதர நிறுவனங்கள் பொதுமக்களுக்கு சமைத்த உணவு வகைகள் மற்றும் நிவாரணப்பொருட்கள் வழங்குதல் தொடர்பாக பின்வரும் நடைமுறைகளை தவறாது பின்பற்றிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஏழை, எளிய பொதுமக்களுக்கு சமைத்த உணவு வகைகள் மற்றும் நிவாரணப்பொருட்கள் வழங்குவதற்கு 48 மணி நேரங்களுக்கு முன்பாக மாவட்ட நிர்வாகத்திற்கு அதாவது சம்மந்தப்பட்ட வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், நகராட்சி ஆணையர்கள், செயல் அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு முறையாக தகவல் தெரிவிக்க வேண்டும்.

ஏழை, எளிய பொதுமக்களுக்கு சமைத்த உணவு வகைகள் வழங்குவதற்கு முன்பாக உணவு பாதுகாப்பு மற்றும் நியமன அலுவலரிடம் உணவு வழங்கப்படும் இடம், வழங்கப்படும் உணவு மற்றும் வழங்குபவரின் விபரம் ஆகியவற்றினை

தெரிவித்து அவரிடமிருந்து தடையின்மைச்சான்று பெற்ற பின்னர் தான் உணவினை தேவையானவர்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட வேண்டும்.

நகராட்சி, பேரூராட்சி, காவல் நிலைய எல்லை மற்றும் கிராம பகுதிகளுக்குட்பட்ட இடங்களில் உணவு தயாரித்து அந்தந்த பகுதிகளில் மட்டும் வழங்கிட வேண்டும். அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் உணவு ஏழை, எளிய பொதுமக்களுக்கு வழங்கப்படக்கூடாது.

உணவு விநியோகிக்க அனுமதிக்கப்பட்ட நேரத்திற்குள்ளாக வழங்கிட வேண்டும். இருப்பினும், உணவு விநியோகிக்க வேண்டிய நேரத்திற்குள்ளாக வழங்கிட தாமதம் ஆகும் பட்சத்தில் முன்னரே சம்மந்தப்பட்ட வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், நகராட்சி ஆணையர்கள், செயல் அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு தகவல் தெரிவித்து உணவு வழங்கிட கூடுதலாக ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் அனுமதி பெற்றுக்கொள்ளலாம்.

ஏழை, எளிய பொதுமக்களுக்கு உணவு விநியோகிக்க முன்னதாக விநியோகிக்கும் இடமானது சுகாதாரமனதாகவும், பாதுகாப்பானதாகவும் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். உணவு வழங்கக்கூடிய இடத்தில் ஒழுங்குபடுத்த காவல் துறையினர் நிறுத்தப்பட வேண்டும். உணவு வழங்கக்கூடிய இடத்தில் வாகன ஓட்டுநர், உணவு வழங்கிட ஏற்பாடு செய்த 3 நபர்கள் மற்றும் உணவு வழங்கப்பட உள்ள இடத்தை சார்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதநிதி ஆகிய மூன்று நபர்களைத்தவிர வேறு நபர்கள் யாரும் இருக்க கூடாது.

உணவு ஏற்றி செல்லும் வாகனத்தில் மேற்கூறிய மூன்று நபர்களைத்தவிர வேறு நபர்கள் வாகனத்தில் பயணிக்க கூடாது, ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதால் அரசாங்கத்தால் அறிவுறுத்தப்பட்ட கொரோனா தொற்று நோய் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் இதர நிறுவனங்கள் பொதுமக்களுக்கு சமைத்த உணவு வகைகள் மற்றும் நிவாரணப்பொருட்கள் வழங்குமிடத்தில் சமூக

இடைவெளியினை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்திருக்க வேண்டும்.

மேற்காணும் நடைமுறைகளை கடைப்பிடிக்காத மற்றும் மீறுபவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் தொற்று நோய்கள் தடுப்புச் சட்டம் மற்றும் இந்திய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**